பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

**29 03 2026** **7 15**

ஞாயிற்றுக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

**1.** ஹோர்முஸ் நீரிணை பகுதியில் தடையற்ற கப்பல் போக்குவரத்தை உறுதி செய்வது குறித்து சவுதி அரேபிய இளவரசர் முகமது பின் சல்மானுடன் ஆலோசனை நடத்தியதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

**2.** மேற்காசியாவில் நிலவும் சூழலைக் கருத்தில் கொண்டு எரிசக்தி பாதுகாப்பில் ஒருங்கிணைந்த நடவடிக்கைகளின் அவசியம் குறித்து பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் வலியுறுத்தியுள்ளார்.

**3.** கேரள சட்டப்பேரவைத் தேர்தலையொட்டி அரசியல் கட்சிகளின் வாக்கு சேகரிப்பு தீவிரமடைந்துள்ளது.

**4.** ரஷ்யாவில் இருந்து சுத்திகரிக்கப்பட்ட பெட்ரோல் ஏற்றுமதிக்கு வரும் ஒன்றாம் தேதி முதல் தடை விதிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது.

**5.** ஸ்பெயின் பாரா பாட்மிண்டன், கலப்பு இரட்டையர் பிரிவில் இந்தியாவின் பிரமோத் பக்த் - மனீஷா ராமதாஸ் இணை இறுதிப் போட்டிக்கு முன்னேறியுள்ளது.

--- இனி விரிவான செய்திகள் --

<<<<>>>>

பிரதமர் திரு நரேந்திர மோடி சவுதி அரேபிய இளவரசர் முகமது பின் சல்மானை தொலைபேசியில் தொடர்புகொண்டு பேசினார்.

இதுகுறித்து சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், மேற்காசிய போர் சூழல் குறித்தும், அப்பகுதியில் தடையற்ற கப்பல் போக்குவரத்தை உறுதி செய்வது குறித்தும் விவாதித்ததாக குறிப்பிட்டுள்ளார்.

எரிசக்தி கட்டமைப்புகள் மீது நடத்தப்படும் தாக்குதலுக்கு இந்தியா கண்டனம் தெரிவிப்பதாக பிரதமர் கூறியுள்ளார்.

சவுதி அரேபியாவில் உள்ள இந்தியர்களின் நலன்களைப் பாதுகாப்பதற்காக அந்நாட்டு அரசு மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளுக்கு தாம் நன்றி தெரிவித்ததாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

மேற்காசியாவில் நிலவும் சூழலைக் கருத்தில் கொண்டு எரிசக்தி பாதுகாப்பில் ஒருங்கிணைந்த நடவடிக்கைள் மேற்கொள்ளப்பட வேண்டியதன் அவசியம் குறித்து பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் வலியுறுத்தியுள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற பல்வேறு அமைச்சகங்களுக்கு இடையேயான ஆலோசனைக் கூட்டத்தில் கலந்துகொண்டு பேசிய அவர் இதனைத் தெரிவித்தார்.

போர்ப் பதற்றத்தை உன்னிப்பாக கவனித்து நாட்டின் எரிசக்தி பாதுகாப்புக்கு தேவையான நீண்டகால அடிப்படையிலான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அதிகாரிகளுக்கு அவர் அறிவுறத்தினார்.

அரசின் அனைத்து கொள்கை முடிவுகளும் குறித்த காலத்திற்குள் செயல்படுத்த வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

ஊடகங்கள் மூலம் பரப்பப்படும் தவறான தகவல்கள் மற்றும் வதந்திகளுக்கு எதிராக துல்லியமான தகவல்களை மக்களுக்கு வழங்குவதற்கான நடவடிக்கைகளை அமைச்சகங்கள் கவனத்தில் கொள்ள வேண்டும் என்று திரு. ராஜ்நாத் சிங் கேட்டுக்கொண்டார்.

<<<<>>>>

இந்தியா - மொசாம்பிக் இடையே வர்த்தகம் மற்றும் முதலீடுகளை அதிகரிப்பதற்கான வாய்ப்புகள் குறித்து அந்நாட்டு பொருளாதாரத்துறை அமைச்சருடன் விவாதித்ததாக மத்திய வர்த்தகம்

மற்றும் தொழில்துறை அமைச்சர் திரு. பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்ள்ள பதிவில், அண்மையில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கால் பாதிக்கப்பட்டுள்ள அந்நாட்டு மக்களுக்கு இந்தியா துணைநிற்கும் என்று தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் கேமரூனில் நடைபெற்று வரும் உலக வர்த்தக அமைப்பின் அமைச்சர்கள் நிலையிலான மாநாட்டிற்கு இடையே நார்வே வெளியுறவு அமைச்சர் திரு **Espen Barth,** பிரிட்டன் வர்த்தக அமைச்சர் திரு. **Peter Kyle,** பார்படாஸ் வெளியுறவு அமைச்சர் திரு. **Christopher Peter Sinckler-**யும் சந்தித்து பேசினார்.

இந்த சந்திப்பின்போது உலக வர்த்தக அமைப்பில் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டியதன் அவசியம் குறித்து விவாதித்ததாக தெரிவித்துள்ளார்.

வர்த்தகம் தொடர்பான முடிவுகளை எடுப்பதற்கு உலக நாடுகளுக்கு இடையே கருத்தொற்றுமை எட்டப்பட வேண்டியது அவசியம் என்றும் அவர் கூறியுள்ளார்.

இந்தியா - பிரிட்டன் இடையே விரிவான பொருளாதார மற்றும் வர்த்க ஒப்பந்தத்தை செயல்பாட்டுக்கு கொண்டு வருவது குறித்து அந்நாட்டு வர்த்தக அமைச்சருடன் ஆலோசனை நடத்தியதாக திரு. பியூஷ் கோயல் குறிப்பிட்டுள்ளார்.

<<<<>>>>

பிரதமர் திரு. நரேந்திர மோடி, மக்களிடையே மனம் திறந்து பேசும் மன்-கி-பாத் நிகழ்ச்சி, அகில இந்திய வானொலியில் இன்று காலை 11 மணிக்கு ஒலிபரப்பாகிறது.

நாட்டில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் இதனை அஞ்சல் செய்யும்.

பிரதமரின் உரை முடிந்தவுடன் அதன் தமிழாக்கத்தை சென்னை அகில இந்திய வானொலி ஒலிபரப்புகிறது.

இது, இரவு 8 மணிக்கு மறுஒலிபரப்பும் செய்யப்படுகிறது.

தமிழகம் மற்றும் புதுச்சேரியில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் இதனை அஞ்சல் செய்யும்.

<<<<>>>>

கேரள சட்டப்பேரவைத் தேர்தலையொட்டி அரசியல் கட்சிகளின் வாக்கு சேகரிப்பு தீவிரமடைந்துள்ளது.

அம்மாநில சட்டப்பேரவைக்கு அடுத்த மாதம் 9ஆம் தேதி வாக்குப்பதிவு நடைபெற உள்ள நிலையில் அரசியல் கட்சித்தலைவர்கள் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

பாலக்காடு மற்றும் திருச்சூரில் நடைபெறும் தேர்தல் பொதுக்கூட்டங்களில் பிஜேபி மூத்த தலைவரும், பிரதமருமான திரு. நரேந்திர மோடி இன்று தேர்தல் பிரச்சாரம் மேற்கொள்கிறார்.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவரும், அம்மாநில முதலமைச்சருமான திரு. பினராயி விஜயன், பாலக்காடு மாவட்டத்தில் உள்ள் 4 சட்டப்பேரவைத் தொகுதிகளில் பிரச்சாரம் மேற்கொள்கிறார்.

காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவரும், அம்மாநில எதிர்க்கட்சித் தலைவருமான திரு. சதீஷன், எர்ணாகுளம் மாவட்டத்தில் சட்டப்பேரவைத் தொகுதிகளில் பிரச்சாரம் மேற்கொள்கிறார்.

கேரளாவில் உள்ள 140 சட்டப்பேரவைத் தொகுதிகளில் மொத்தம் 890 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர்.

இந்த தேர்தலில் 2 கோடியே 71 லட்சம் வாக்காளர்கள் வாக்கு செலுத்த தகுதி பெற்றுள்ளனர்.

இதனிடையே புதுச்சேரியில் தேர்தலுக்குப் பிந்திய கருத்துக்கணிப்பை வெளியிடுவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக புதுச்சேரி தலைமைத் தேர்தல் அதிகாரி திரு. பி. ஜவஹர் வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த தடை ஏப்ரல் 9ஆம் தேதியில் இருந்து ஏப்ரல் 29ஆம் தேதி வரை அமலில் இருக்கும் என்று தெரிவித்துள்ளார்.

தேர்தல் நடத்தை விதிமுறைகளை மீறுவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று திரு. ஜவஹர் தெரிவித்துள்ளார்.

இதனிடையே மேற்குவங்கத்தில் உள்ள அனைத்து சட்டப்பேரவைத் தொகுதிகளிலும் காங்கிரஸ் போட்டியிடும் என்று அக்கட்சி அறிவித்துள்ளது.

ரஷ்யாவில் இருந்து சுத்திகரிக்கப்பட்ட பெட்ரோல் ஏற்றுமதிக்கு வரும் ஒன்றாம் தேதி முதல் தடை விதிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக அந்நாட்டு துணைப் பிரதமர் திரு. அலெக்சாண்டர் நோவக், கச்சா எண்ணெய் ஏற்றுமதி எவ்வித பாதிப்புமின்றி தொடர்ந்து நடைபெறும் என்று தெரிவித்துள்ளார்.

பெட்ரோலியப் பொருட்களுக்கான உள்நாட்டு விநியோகத்தை தடையின்றி பராமரிக்க ஏதுவாக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது.

<<<<>>>>

வடகிழக்கு மாநிலங்கள் வளரும் நாடுகளுக்கு இடையேயான பாலமாக திகழ்கிறது என்று மத்திய அமைச்சர் திரு. ஜோதிர் ஆதித்ய சிந்தியா குறிப்பிட்டுள்ளார்.

புதுதில்லியில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொண்டு பேசிய அவர், இந்தியா வளரும் நாடுகளுடன் பொருளாதார மற்றும் கலாச்சார பரிமாற்றத்தை வலுப்படுத்துவதற்கான முயற்சிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படும் என்று கூறினார்.

வடகிழக்கு மாநிலங்களின் வளர்ச்சிக்குத் தேவையான நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருவதாக திரு. ஜோதிர் ஆதித்ய சிந்தியா தெரிவித்தார்.

<<<<>>>>

வடகிழக்கு மாநிலங்களின் ஒருசில இடங்களில் இன்று இடி மின்னலுடன் கூடிய கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தில்லி, ஹரியானா, சண்டிகர், ஹிமாச்சலப்பிரதேசம், பஞ்சாப் மற்றும் ராஜஸ்தானின் ஒருசில இடங்களில் அடுத்த 2 நாட்களுக்கு மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக அந்த மையம் கூறியுள்ளது.

ஜம்மு-கஷ்மீர், லடாக், கில்ஜித் பாகிஸ்தான், முசாஃபராபாத் ஆகிய பகுதிகளிலும் இதே நிலை நீடிக்கும் என்று அந்த மையம் தெரிவித்துள்ளது.

இதனிடையே பிஹார், மத்திய மகாராஷ்டிரா, மராத்வாடா, ஒடிசா, தெலங்கானா, உத்தராகண்ட் மற்றும் மத்தியப்பிரதேசத்தின் ஓரிரு இடங்களில் பலத்த சூறைக்காற்று வீசக்கூடும் என்றும் வானிலை மையம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில் வடமேற்கு இந்தியாவில் அதிகபட்ச வெப்பநிலை 2 முதல் 4 டிகிரி வரை அதிகரிக்கக் கூடும் என்று வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

<<<<>>>>

ஸ்பெயின் பாரா பாட்மிண்டன் போட்டியில், ஆடவர் ஒற்றையர் பிரிவில், இந்தியாவின் நவீன் சிவகுமார், பிரமோத் பகத், நிதேஷ் குமார், மகளிர் ஒற்றையர் பிரிவில், இந்தியாவின் மனிஷா ராமதாஸ், துளசிமதி முருகேசன், ஆகியோர் இறுதி போட்டிக்கு முன்னேறியுள்ளனர்.

ஆடவர் இரட்டையர் பிரிவில், இந்தியாவின் பிரமோத் பகத் - சுகந்த் கடம் இணையும், நவீன் சிவகுமார் - சூர்ய காந்த் யாதவ் இணையும் இறுதி போட்டிக்கு முன்னேறியுள்ளது.

கலப்பு இரட்டையர் பிரிவில், இந்தியாவின் நிதேஷ் குமார் - துளசிமதி முருகேசன் இணை, பிரமோத் பகத் - மனிஷா ராமதாஸ் இணை இறுதி போட்டிக்கு முன்னேறியுள்ளது.

-------------

அகமதாபாத் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் சித்தார்த் ராவத் இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் அவர், 7-6, 6-3 என்ற செட் கணக்கில், இத்தாலியின் Alexandr Binda-ஐ வென்றார்.

ஆடவர் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் அபினவ் சஞ்ஜீவ் - மணீஷ் சுரேஷ் குமார் இணையும் இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

------------

ஐபிஎல் கிரிக்கெட் போட்டியில், பெங்களூரு அணி 6 விக்கெட் வித்தியாசத்தில், ஐதராபாத் அணியை வென்றது.

பெங்களூருவில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில், முதலில் பேட் செய்த ஹைதராபாத் அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில், 9 விக்கெட் இழப்பிற்கு 201 ரன் எடுத்தது.

202 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் ஆடிய பெங்களூரு அணி 15.4 ஓவரில் 4 விக்கெட் இழப்பிற்கு 203 ரன் எடுத்து வெற்றி பெற்றது.

இன்று நடைபெறும் போட்டியில், மும்பை அணி, கொல்கத்தா அணியை எதிர்கொள்கிறது.

மும்பையில் நடைபெறும் இப்போட்டி, இரவு 7.30 மணிக்கு தொடங்குகிறது.

------------

20 வயதுக்குட்பட்டோருக்கான தெற்காசிய கால்பந்து சாம்பியன் போட்டியில், இந்தியா - பங்களாதேஷ் அணிகளுக்கு இடையேயான ஆட்டம் டிராவில் முடிந்தது.

மாலத்தீவில் நடைபெற்ற இப்போட்டியில், இரு அணிகளும் தலா ஒரு கோல் அடித்தனர்.

**<<<<The End>>>>**